# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை** : **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 90 /பேரூ/2024**

**நாள் : 19.02.2025**

திரு. துரை. சுப்பிரமணியன்,
கோவிந்தபுரம்,
தஞ்சாவூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதுார் வட்டம், கோவிந்தபுரம், கதவு எண்.346, வீரசோழன் நகர் என்ற முகவரியை சேர்ந்த திரு. துரை. சுப்பிரமணியன் என்பவரது 07.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.08.2024 அன்று பெறப்பட்டு, 90/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதுார் வட்டம், கோவிந்தபுரம், கதவு எண்.346, வீரசோழன் நகர் என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. துரை. சுப்பிரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 07.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதுார் வட்டம், ஆடுதுறை தேர்வு நிலை பேரூராட்சியில் எனது பெயரில் கதவு எண். 9A/34 என்கிற கூரை வீட்டுக்கு செலுத்தி வந்த சொத்து வரி தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலர் என்னிடம் ஒப்புதல் மற்றும் பெயர் மாற்றம் குறித்து எந்தவொரு ஆவணங்களும் பெறாமலும் மேற்படி எதிர் தரப்பினர் வசம் சொத்து வரி பெயர் மாற்றம் செய்து கொள்ள எந்தவொரு ஆவணங்களும் பெறாமலும் எனது பெயருடைய சொத்து வரி ரசீதை திரு. சிங்காரவேலு என்பவருக்கு செயல் அலுவலர் தனது அதிகாரத்தை துஷ்பியோகம் செய்து பெயர் மாற்றம் செய்துள்ளார்.

மேற்படி விபரம் அறிந்து 03.10.2016ஆம் ஆண்டு முதல் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமாகவும் மற்றும் பல்வேறு வழிகளிலும் விண்ணப்பம் வாயிலாக எனது பெயருடைய சொத்து வரி எவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது என்பதற்கான விபரம் குறித்து கோரி வருகிறேன்.

ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி ந.க. எண்.199/2018 அ2 நாள் 12.10.2018ந் தேதி கடிதத்தில், திரு.இராமபிரசாத் செயல் அலுவலர் அவர்கள் கிரய உடன்படிக்கைக்கும் கிரய ஆவணத்திற்கும் அர்த்தம் புரியாமல் கவன குறைவால் ஏனோ தானோ என பதிலளித்த கவனமின்மை காரணத்தினால் உரிய காலத்தில் பதில் கிடைக்காமல் அலைக்கழிக்கப்பட்டு கால விரையம் மற்றும் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டேன்.

மேற்படி தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் நான் கோரிய தகவல்களுக்கு பேரூராட்சி அலுவலக ந.க. எண்.245/2022/அ1 நாள் 30.06.2022 கடிதத்தில் திரு. சி. சிவலிங்கம் செயல் அலுவலர் அவர்கள் கடிதத்தின் பாரா 12ல் (வினா : மேற்காணும் எனது பெயர் உடைய சொத்து வரியை பெயர் மாற்றம் செய்து தர வேண்டி யாரேனும் விண்ணப்பம் செய்யப்பட்டது குறித்து எந்தெந்த அலுவலர் என்னென்ன நடவடிக்கைகளை உண்மையில் மேற்கொண்டார் என்பதை நான் அறிய சொத்து வரி பெயர் மாற்றம் செய்து கொடுக்க கையாண்ட தங்கள் அலுவலக கோப்பின் அனைத்து பக்கங்களின் ஒளி நகல் அலுவலக குறிப்புக் கட்டுடன் அளிக்க வேண்டுகிறேன். ) பதில் தகவல் எவரும் விண்ணப்பம் செய்யவில்லை என பதில் அளித்துள்ளார்.

மேற்படி 04.03.2024ம் தேதியில் சட்ட பூர்வ அறிவிப்பு கடிதம் அனுப்பி வைத்திருந்தேன். அதனை தொடர்ந்து பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு. சக்திவேல் அவர்கள் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு சிங்காரவேலு என்பவருக்கு 3 முறை நோட்டீஸ் அனுப்பி அதன் மூலம் அவர் அளிக்கும் ஆவணங்கள் மற்றும் தகவல் அடிப்படையில் பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்றார்.

மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இராம பிரசாத் அவர்கள், சிங்கார வேலு என்பவருக்கு பேரூராட்சி அலுவலக குறிப்பாணை அனுப்பி அதன் நகல் எனக்கு அனுப்பி வைத்தார். குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ளவாறு காலகெடுவில் சிங்காரவேலு என்பவர் பதில் தகவல் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பேரூராட்சி அலுவலகம் சிங்காரவேலு என்பவருக்கு குறிப்பாணை II அனுப்பி அதன் நகல் இமெயில் மூலம் எனக்கு அனுப்பி கிடைக்கப் பெற்றேன். 2வது குறிப்பாணைக்கும் உரிய காலக்கெடுவில் பதில் தகவல் தரவில்லை. மேலும் 3வது குறிப்பாணையை அனுப்பாமல் பேரூராட்சி அலுவலக செயல் அலுவலர் காலதாமதபடுத்தி வந்தார்.

மேற்படி 3வது குறிப்பாணையை அனுப்ப காலதாமத படுத்திய காரணத்தினால் பேரூராட்சி அலுவலக நடவடிக்கை குறித்து தகவல் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்துள்ளேன். விண்ணப்பத்தை பெற்றுக் கொண்ட பொது தகவல் அலுவலர் சட்டவிதி காலகெடுவுக்குள் பதில் தகவல் அளிக்காததால், மாவட்ட பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலக முதல் முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு முதல் மேல்முறையீட்டு மனு பதிவு அஞ்சலில் அனுப்பி வைத்தேன். அதனை தொடர்ந்து மேற்படி மாவட்ட பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலக முதல் மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் அலுவலக ந.க. எண்.1944/2024/ பேரூ3 நாள் 05.07.2024 குறிப்பாணையை, ஆடுதுறை தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்துக்கு அனுப்பியும் அதன் நகலை எனக்கு அனுப்பியும் வைத்துள்ளார். மேற்படி அக்கடிதம் தொடர்பாக பேரூராட்சி பொது தகவல் அலுவலர் இதுநாள் வரை உரிய பதில் அளிக்கவில்லை.

மேற்படி பேரூராட்சி ந.க. எண்.163/2024/அ1 நாள் 12.07.2024 கடிதம் வாயிலாக திரு. இராமபிரசாத் செயல் அலுவலர் அவர்கள், சொத்துவரி பெயர் மாற்றம் குறித்து சிங்காரவேலு என்பவரிடமிருந்து திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமான இடத்திற்குரிய ஆவண நகல் வரப்பெற்றது. அதனைத் தொடர்ந்து சிங்காரவேலு என்பவர் திருவாவடுதுறை ஆதீனத்திடமிருந்து மேற்காணும் இடத்திற்குரிய தனியாரின் பெயரில் பகுதி சீட்டு நகலினை இப் பேரூராட்சியில் சமர்ப்பித்துள்ளார். அதன் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்ற விவரம் மனுதாரருக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது என பதிவு அஞ்சல் மூலம் எனக்கு தகவல் அளித்துள்ளார். அக்கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ள நகல் பகுதி சீட்டு நகல் அல்ல. அவை

ஏதோ ஒரு இடத்திற்கு 26.05.2024 தேதியிட்ட மனை பகுதி பசலி பாக்கி தொகை செலுத்திய ரசீது நகலை இணைத்து அனுப்பியுள்ளார்.

மேற்படி நான் பேரூராட்சிக்கு அனுப்பிய சட்ட பூர்வ அறிவிப்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்திற்கு சம்பந்தம் இல்லாத பகுதி சீட்டு நகல் என இணைத்து அனுப்பியுள்ளார். இதிலிருந்து தெரிய வருவதாவது தற்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இராம பிரசாத் அவர்கள் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் அதிகார துஷ்பிரயோகம் செய்து சிங்காரவேல் என்பவருக்கு சாதகமாகவும் மூன்றாவது குறிப்பாணையை அனுப்பாமலும் சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு இதுநாள் வரை சிங்காரவேலு என்பவரிடம் எந்த ஒரு ஆவணங்களும் பெறாமல் எனக்கு பாதகமாகவும் நான் கோரிய தகவல்களுக்கு உரிய பதில் தர கடமையிலிருந்து தவறியும் சட்டத்திற்கு புறம்பாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். ஆகவே எனது பெயருடைய சொத்துவரியை மீட்டுத்தர வேண்டி பணிவுடன் வேண்டுகிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.08.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 06.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

> ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி, தற்போது 2வது வார்டு, பாலக்கரைத் தெரு, கூரைவீடு கதவு எண்.9ஏ/34, உரிய சொத்து வரி விதிக்கப்பட்ட இடமானது, மயிலாடுதுறை மாவட்டம், திருவாவடுதுறை ஆதினத்திற்கு சொந்தமானகும். இவ்விடத்தில் திரு. டி. சுப்பிரமணியன் என்பவர், ஆதினத்திடமிருந்து குத்தகை பகுதி சீட்டு அடிப்படையில், ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சியில் சொத்து வரி விதிக்கப்பட்டு அதில் வசித்து வந்துள்ளார்.
>
> சொத்து வரி கேட்பு பதிவேட்டினை பரிசீலித்ததில், மேற்காணும் சொத்து வரி விதிப்பு 1994ஆம் ஆண்டு திரு. டி. சுப்பிரமணியன் என்பவர் பெயரில் உள்ள சொத்து வரியானது, திருவிடைமருதூர் தாலுக்கா, 47, கோட்டூர் கிராமம் அக்ரஹார தெருவில் வசிக்கும், திரு. ப. தங்கராசு குமாரர் திரு. த. சிங்காரவேலு என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டு சொத்து வரி கேட்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பெயர் மாற்றம் நாளது தேதி வரை சொத்து வரி கேட்பு பதிவேட்டில் உள்ளது என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.
>
> பேரூராட்சி பகுதியில், வசிக்கும் இடம் கோயில் இடமாகவோ, ஆதினத்திற்கு சொந்தமான இடமாகவோ அல்லது இதர தொண்டு நிறுவனங்களுக்கு சொந்தமான இடமாக இருப்பின், மேற்காணும் கோயில், ஆதினம் மற்றும் இதர தொண்டு நிறுவனத்திடமிருந்து பெறப்படும் குத்தகை பகுதி சீட்டின் அடிப்படையில் பேரூராட்சியால் சொத்து வரி பெயர் மாற்றம் செய்து தரப்படுகிறது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.
>
> மேற்காணும் இடமானது, ஆதினத்திற்கு சொந்தமான இடம் என்பதினால், ஆதினத்தின் விருப்பத்தின் பேரில், அவர் யார் பெயருக்கு குத்தகை ஒப்படைப்பு பகுதி சீட்டு வழங்குகிறாறோ, அதன் அடிப்படையிலேயே மேற்கண்டவாறு, சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.
>
> எனவே, மனுதாரர் திரு. டி. சுப்பிரமணியன் என்பவர் அவரது பெயரில் மேற்காணும் சொத்து வரி விதிக்கப்பட்ட இடத்திற்கு திருவாவடுதுறை ஆதினத்திடமிருந்து, குத்தகை பகுதி சீட்டின் நாளது தேதியில் பெற்று வரும் தருவாயில், அவ்விடத்திற்கான சொத்து வரி

விதிப்பினை அவரது பெயரில் மாற்றம் செய்து உத்தரவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மனுதாரர் திரு. டி. சுப்ரமணியன் என்பவர் தனது பெயரில் உள்ள சொத்து வரியினை, தனது ஒப்புதல் பெறாமல் திரு. த. சிங்காரவேலு என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டது குறித்து, தகவல் உரிமைச் சட்டம் 2005–ன் கீழும், உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டம், உங்கள் தொகுதியில் முதல்வர் மற்றும் இன்னும் பிற வழிகளில் 03.10.2016 முதல் நாளது தேதி வரை தகவல்களை பல கோணங்களில் கோரிய வண்ணமே உள்ளார். அவருக்கு உரிய பதில்களும் மேற்காணும் பொருள் குறித்து அனைத்து தகவல்களும் பேரூராட்சியில் இருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் பல மனுதாக்கல்கள் வழியாக தகவல்கள் வழங்கப்பட்டு விட்டது.

மேலும், 09.10.2024 நாளிட்ட கடிதம் மூலம், இதை தவிர வேறு எந்த தகவலும் பேரூராட்சியில் ஏதும் இல்லை எனவும், இதுவே இறுதியான தகவலாக மனுதாரருக்கு அளிக்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர் திரு.டி. சுப்ரமணியன் என்பவர், தனது பெயரில் உள்ள சொத்துவரியினை பெயர் மாற்றம் செய்ததற்கான, அளிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்களை கோரியதின் அடிப்படையில், அலுவலகத்தில் சொத்துவரி கேட்பு பதிவேட்டினை தவிர, இதர ஆவணங்கள் கிடைக்கப் பெறாததால், பெயர் மாற்றம் செய்யப்பட்ட திரு. த. சிங்காரவேலு என்பவரிடம், பெயர் மாற்றம் செய்திட பேரூராட்சிக்கு அளிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்களை அளிக்குமாறு கோரி, அவரிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் பேரூராட்சியில் இருக்கும் ஆவணங்களின் நகல்களை 12.10.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக 90 பக்கங்கள் தனியருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவற்றில், தான் வசித்து வந்த இடத்தினை விற்பதற்காக மனுதாரர், கிரய உடன்படிக்கை செய்து கையெழுத்துயிட்டுள்ளார். அதன் விவரத்தினை மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவற்றினை மனுதாரர் கவனத்தில் கொண்டு பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு கிரய உடன்படிக்கைக்கும், கிரய ஆவணத்திற்கும் அர்த்தம் தெரியவில்லை என தெரிவித்துள்ளார். ஆதினத்தின் குத்தகை பகுதி சீட்டின் அடிப்படையிலேயே பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. கிரய உடன்படிக்கை பத்திரத்தின் அடிப்படையில் இல்லை என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

திரு. டி. சுப்ரமணியன் என்பவர் பெயரில் உள்ள சொத்து வரி விதிப்பினை, 1994–ம் ஆண்டு பெயர் மாற்றம் செய்து, கேட்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை தவிர இவர் பெயரில் உள்ள சொத்து வரியினை, பெயர் மாற்றம் செய்திட எவரும் விண்ணப்பம் செய்யவில்லை என்பதனை மனுதாரருக்கு 30.06.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக முன்னாள் செயல் அலுவலர் திரு. வி. சிவலிங்கம் அவர்களால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு. டி. சுப்பிரமணியன் என்பவர் 04.03.2024 தேதியில் சட்ட பூர்வ அறிவிப்பில் மேற்காணும், திருவாவடுதுறை ஆதினத்திற்கு சொந்தமான இடத்தில் உள்ள வீட்டின் கதவு எண்.9ஏ/34, திரு. டி. சுப்பிரமணியன் பெயருடைய சொத்து வரியை திரு. த. சிங்காரவேலு என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதற்குரிய, பேரூராட்சிக்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் விவரத்தினையும் மற்றும் பெயர் மாற்றம் குறித்த விளக்கத்தினையும் அளித்திடவும், அவ்வாறு இல்லையெனில், மேற்காணும் சொத்து வரி, பெயர் மாற்றத்தினை ரத்து செய்து, தனது பெயரில் 2024–2025 ஆம் ஆண்டிற்கு சொத்து வரி விதிப்பு இரசீது வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், தவறும்பட்சத்தில் தனக்கு

நஷ்ட ஈடாக ரூ.1.00 கோடி கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர போவதாகவும் கோரியிருந்ததைத் தொடர்ந்து, பெயர் மாற்றம் செய்திட அளிக்கப்பட்ட ஆவணங்களை அளித்திட திரு.த. சிங்காரவேலு என்பவருக்கு 15.03.2024 மற்றும் 10.04.2024 நாளிட்ட கடிதங்களின் விவரப்படி, இரண்டு அறிவிப்புகள் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், மனுதாரர் திரு. டி. சுப்பிரமணியன் என்பவர், பேரூராட்சி இளநிலை உதவியாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தனது சட்ட பூர்வ அறிவிப்பிற்கு, நடவடிக்கை விவரம் கோரியதினால், இளநிலை உதவியாளரால் நடவடிக்கை விவரம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், சட்ட பூர்வ அறிவிப்புக்கு, பெயர் மாற்றம் செய்யப்பட்ட திரு. த. சிங்காரவேலு என்பவரிடம் பெறப்பட்ட தகவல்களின் ஆவண நகல்களை 12.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் தகவல்களை, மனுதாரரால் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005–ன் கீழ் கோரப்பட்டதற்கு 14.06.2024 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மனுதாரர் தகவல் கிடைக்கப் பெறவில்லை என மேல்முறையீட்டு அலுவலருக்கு 21.06.2024 அன்று விண்ணப்பம் செய்துள்ளார். அதன் அடிப்படையில் 05.07.2024 நாளிட்ட மேல்முறையீட்டு அலுவலரின் கடித விவரப்படி, நடவடிக்கை மேற்கொள்ள செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர் 04.10.2024 அன்று கோரிய தகவல்களுக்கு 09.10.2024 நாளிட்ட கடித விவரப்படி, அளிக்கப்பட்ட தகவல்களை பெற்றுக் கொண்டு, அந்த தகவல்களையே தகவல்களாக கோரி, தகவல் உரிமை சட்டம் 2005ன் கீழ், 16.11.2024 அன்று செயல் அலுவலரிடம் விண்ணப்பம் செய்துள்ளார். அதற்கும் 12.12.2024 நாளிட்ட கடித விவரப்படி, தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் இடத்தின் உரிமையாளராக திருவாவடுதுறை ஆதினம்,அவர்களிடம் குத்தகை ஒப்படைப்பு குறித்து, எவ்வித முறைபீடும்/விவரமும் கோராமல், சொத்து வரி பெயர் மாற்றம் குறித்து செயல் அலுவலரிடம் விவரம்/தகவல் கோரிய வண்ணம் இருந்து வருகிறார் என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும், சொத்து வரி பெயர் மாற்றமானது, 1994–ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது. தகவல்கள் கோரியதற்கு பேரூராட்சி அலுவலகத்தில் இருக்கும் ஆவணங்கள் அடிப்படையிலும், நடைமுறைகளின்படியும், மனுதாரருக்கு தகவல் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பெயர் மாற்றம் குறித்த தகவல் அனைத்தும் அளிக்கப்பட்டு விட்டது. புதியதாக தகவல் அளிக்க ஏதும் இல்லை. இருப்பினும் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு சட்டத்திற்குட்பட்டு, அளித்த தகவல்களையே மீண்டும் மீண்டும் அளிக்கப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. மனுதாரர் கூறியவாறு எந்தவொரு உள்நோக்கமும் இல்லை. அதிகார துஷ்பிரயோகமும் செய்யப்படவில்லை என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. மனுதாரர்தான் இந்த ஒரே கேள்விகளை பலவிதமான கோணங்களில். 2016 ஆம் ஆண்டிலிருந்து வேண்டுமென்றே தகவல் கோரி வருகிறார் என்ற விவரத்தினையும் பணிந்து தெரிவிக்கப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் முறையீட்டு மனு, ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம், கோவிந்தபுரம் என்ற இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. துரை. சுப்பிரமணியன் என்பவர் தனது 07.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட கதவு எண்.9A/34, பாலக்கரைத் தெருவில் உள்ள வீட்டின் சொத்து வரியினை தனது (திரு. டி. சுப்பிரமணியன்) பெயரிலிருந்து எவ்வித தனது ஒப்புதல் இல்லாமலும் எவ்வித ஆவணமும் இல்லாமலும் திரு. சிங்காரவேலு என்பவரின் பெயரில் சொத்து வரியை முறைகேடாக ஆடுதுறை பேரூராட்சி செயல் அலுவலர் மாற்றம் செய்துள்ளார் என புகார் தெரிவித்து, மனுதாரர் சொத்துவரியை தனது பெயரில் மீண்டும் மாற்றம் செய்திட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரரின் புகார் மனு குறித்து, ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை பெற்று ஆய்வு செய்யப்பட்டதில், மனுதாரர் திரு. டி. சுப்பிரமணியன் என்பவரின் பெயரில் உள்ள சொத்து வரியானது 1994 ஆம் ஆண்டில் திருவாவடுதுறை ஆதினம் வழங்கும் குத்தகை ஒப்படைப்பு பகுதி சீட்டின் அடிப்படையில் திரு. த. சிங்காரவேலு என்பவரின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. 30 ஆண்டுகள் பின்னர் மனுதாரர் திரு. துரை. சுப்பிரமணியன் என்பவர் தனது 07.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் கதவு எண்.9A/34, பாலக்கரை தெருவில் உள்ள வீட்டின் சொத்து வரியில் இடம் பெற்றுள்ள திரு. த. சிங்காரவேலு என்கிற பெயரிலிருந்து மீண்டும் தனது (திரு. துரை சுப்பிரமணியன்) பெயருக்கு மாற்றிட கோரியுள்ளார்.

இந்நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (c)-ன்படி முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்யக்கூடாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) Xxxxxx

(b) Xxxxxx

(c) any complaint filed after the expiry of five years from the date on which the occurance is said to have taken place.

மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் நிகழ்வானது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1994ஆம் ஆண்டில் நடைபெற்று உள்ளதால், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற சட்டம் பிரிவு 10(3)(c)ன்படி, மனுதாரரின் புகார் மனுவினை பரிசீலிக்க இயலாது என்பதால், இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமனற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 19ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. துரை. சுப்பிரமணியன்,
346, வீரசோழன் நகர்,
கோவிந்தபுரம், திருவிடை மருதூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் - 612 101.

2) செயல் அலுவலர்,
ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை –600 028

4) இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 600 028

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (மு.கூ.பொ.)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032